**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC/ 310/2024** |
| **Sessions** | **:** | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | **:** | **PW1 / LW 1** |
| **Name** | **..** | பால்ராஜ் |
| **Father's/Husband's Name** | **..** | முத்தழகு |
| **Village** | | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | **64** |

**Date: 11.03.2026**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாணை :-**

1. நான் தற்போது எண்.9,சின்னகண்ணு தெரு, பெரியதோப்பு, மணலி என்ற முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. சுமார் 2 மூன்று வருடங்களுக்கு முன்பு தெருவில் கும்பலக நின்று கொண்டு சண்டையிட்டுக்

கொண்டிருந்தார்கள். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 05/02/2022 அன்று மதியம் 12.30 மணிக்கு அபுல் என்ற கொத்தனார், காலுராம் என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டு வரும் கடையை பூசி கொண்டு இருந்த பொழுது சிமெண்ட் சிறிதளவு பக்கத்து இடத்தில் வேலை செய்து கொண்டு இருந்த தரணி என்பவர் மீது பட்டுள்ளதாகவும். உடனே தரணி மேஸ்திரி அபுல் வேலை செய்யும் இடத்திற்கு அத்துமீறி நுழைந்து வாய்தகராறு செய்து சுத்தி மற்றும் கட்டையால் அபுல் என்பவரின் வலது கை, வலது தோல்பட்டை, தலை ஆகிய இடங்களில் அடித்து காயப்படுத்தியதாக போனில் தகவல் தெரிவித்ததாகவும். உடனே நீங்கள் சென்று தடுத்த பொழுது உங்களையும் தரணியின் மைத்துனர் அவருடன் இருந்த மற்றொருவர் கல்லால் உங்கள் இடது முழங்கையில் குத்தினார்கள் என்றும். நீங்கள் உடனே அபுல் என்பவரை தன்னிடம் வேலை செய்யும் இஞ்சினியர்

நவீன்குமார் என்பவர் மூலமாக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும். பிறகு தரணி மேஸ்திரி உங்களையும் உங்களிடம் வேலை செய்யும் நபர்களையும் கட்டையை காட்டி ஒழுங்காக வேலை செய்யுங்கள் இல்லையென்றால் உங்களை கொன்றுவிடுவேன் என்று கூறிவிட்டு சென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:- இல்லை

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2026.03.11 15:13:59 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/ 310/2024** |
| **Sessions** | : | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | : | **PW2 / LW 2** |
| **Name** | .. | அபுலி |
| **Father's/Husband's Name** | .. | சமஹுர் சர்தார் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **33** |

**Date: 11.03.2026**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாணை** :-

நான் மேற்கு வங்காளத்தை சார்ந்தவன் தற்போது மணலியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னை யார் அடித்தார்கள் என்று தெரியாது. கூட்டமாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 05/02/2022 அன்று மதியம் 12.30 மணிக்கு காலுராம் என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டு வரும் கடையை பூசி கொண்டு இருந்த பொழுது சிமெண்ட் சிறிதளவு பக்கத்து இடத்தில் வேலை செய்து கொண்டு இருந்த தரணி என்பவர் மீது பட்டுள்ளதாகவும். உடனே தரணி மேஸ்திரி அபுல் வேலை செய்யும் இடத்திற்கு அத்துமீறி நுழைந்து வாய்தகராறு செய்து சுத்தி மற்றும் கட்டையால் எனது வலது கை, வலது தோல்பட்டை, தலை ஆகிய இடங்களில் அடித்து காயப்படுத்தியதாக போனில் பால்ராஜ் என்பவருக்கு தகவல் தெரிவித்ததாகவும். என்னை இஞ்சினியர் நவீன்குமார் என்பவர் மூலமாக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும். போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:- இல்லை

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2026.03.11 15:14:07 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்